# பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை

| வ எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை / தொலைபேசி / நிகரி / விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | **டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித் திட்டம்**<br><br>பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்யவும், அவர்களுக்கு கர்ப்பக் காலத்தில் சத்தான உணவு கிடைக்கச் செய்யவும், எடை குறைவு இல்லாத குழந்தையை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை போன்ற நோய் ஏற்படுவதை தடுக்கவும் ஒவ்வொரு ஏழை, எளிய கர்ப்பிணிப் பெண்ணுக்கும் ஆறு மாதங்களுக்கு மாதந்தோறும் ரூபாய்.1000/– வீதம் மகப்பேறு உதவித்தொகை வழங்கும் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித் திட்டம், 2006–2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் படுகிறது. இந்த ரூபாய் 6000/– உதவித் தொகையில், முதல் தவணையாக ரூபாய் 3000/– கருவுற்ற ஏழாவது மாதத்திலும், இரண்டாவது தவணையாக ரூபாய் 3000/– குழந்தை பிறந்த உடனும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, பயனாளி வறுமைக் கோட்டிற்குகீழ் இருக்க வேண்டும். பயனாளி 19 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். இந்த நிதிஉதவி இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் வழங்கப்படும். | 1. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியலில் உள்ளவர்கள்.<br>2. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்ட உறுப்பினர் அட்டை வைத்திருப்பவர்கள்.<br>3. குடிசை வீடு, சிறிய ஓட்டு வீடு மற்றும் சிறிய வாடகை வீட்டில் வறிய நிலையில் வசிப்பவர்கள்.<br>4. தொகுப்பு வீடுகள், சுனாமி அழிவினால் கட்டித்தரப்பட்ட வீடுகள் மற்றும் அரசு இலவசமாக வழங்கப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள்.<br>5. விவசாயக் கூலி வேலை, சலவைத் தொழில், ஆட்டோ முதலான வாகனங்களை தினக்கூலிக்கு ஓட்டுபவர்கள்.<br>6. கல்குவாரி, சுண்ணாம்பு காளவாய், செங்கல் சூளை போன்றவற்றில் தினக்கூலிக்கு வேலை செய்பவர்கள்.<br>7. சொந்த வீடு இருந்தும் கூலி வேலை செய்பவர்கள்.<br>8. நிலமற்ற ஏழைகள்.<br>9. குடும்பத் தலைவர் பருவ காலத்திற்கு ஏற்றவாறு வெளியூர் சென்று கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுபவர்கள். | 1. தாய்சேய் நல அட்டையின் நகல்<br>2. இலங்கை தமிழர் எனில் புலம் பெயர்ந்தோர் சான்றிதழ் நகல்.<br>3. உழவர் பாதுகாப்புத்திட்ட உறுப்பினர் அட்டையின் நகல். | 1. கிராம சுகாதார செவிலியர்<br>2. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்<br>3. சுகாதார மாவட்டத்தில் உள்ள அந்தந்த வட்டார மருத்துவ அலுவலர் (Block Medical Officer concerned) | இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை 6. தொலைபேசி எண். 044 24335075 Extn -252. நிகரி 24332768 |

| வ எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை / தொலைபேசி / நிகரி / விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | | 10. கணவனால் வருமானம் ஈட்ட இயலாமல் பெண் தலைமைப் பொறுப்பேற்று வறிய நிலையில் உள்ள குடும்பங்கள்.<br>11. எந்த வேலையும் செய்ய இயலாதவர்கள்.<br>மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒரு தகுதி இருப்பவர்கள் இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவார்கள். | | | |
| 2 | <u>**ஜனனி சுரக்ஷா யோஜனா (மகப்பேறு உதவித் திட்டம்)**</u><br>இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவ மனைகளில் பிரசவங்களை ஊக்குவிப்பதன் மூலமாக தாய் மற்றும் சேய் இறப்புகளை குறைப்பதாகும்.ஒவ்வொரு மருத்துவமனை பிரசவத்திற்கும் கிராமப்புறத்திற்கு ரூ.700/–, நகர்புறத்திற்கு ரூ.600/– வீதம் வழங்கப் படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்புற வீட்டுப் பிரசவங்களுக்கு ரூ.500/– வீதம் வழங்கப் படுகிறது. வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் இத்திட்டம் பயனளிக்கும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு வருமான உச்சவரம்பு கிடையாது.<br><u>**ரொக்க உதவித்தொகை**</u><br>அ) ரூ.700/– கிராமப்புற அரசு / தனியார் மருத்துவமனைப் பிரசவம்<br>ஆ) ரூ.600/– நகர்ப்புற அரசு / தனியார் மருத்துவமனைப் பிரசவம்<br>இ) ரூ.500/– கிராமப்புற/ நகர்ப்புற வீட்டுப் பிரசவம் | 1. பயனாளிகள் 19 வயது நிரம்பியிருக்க வேண்டும்<br>2. இரண்டு உயிருடன் உள்ள குழந்தைப் பேறுகளுக்கு மட்டும்<br>3. வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கட்கு மட்டும்<br>4. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வருவாய் குறித்த உச்சவரம்பு கிடையாது | 1. பஞ்சாயத்து தலைவர் அல்லது கிராம நிர்வாக அதிகாரி அல்லது கிராம சுகாதார செவிலியர் வழங்கிய வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கான சான்று.<br>2. வயது வரம்பிற்கான சான்றிதழ்<br>3. தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் | 1. கிராம சுகாதார செவிலியர்<br>2. மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் | இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை 6.<br>தொலைபேசி எண். 044 24335075 Extn -241.<br>நிகரி 24332768 |

# <u>பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை</u>

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை / தொலைபேசி / நிகரி விவரங்கள் | விண்ணப்ப மாதிரி படிவம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 3. | மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம். | அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8-ம் வகுப்புகளில் படிக்கும் மாணவ, மாணவிகள். | - | <u>மாநிலத்தில் :</u> பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர். <u>மாவட்டத்தில் :</u> சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர். | தொலைபேசி : 044 - 24320802 24335072 நிகரி : 044 - 24323942 | - |